நாள் 05.12.2023.

அசல் வழக்கு எண் 20/2021

பி சா 1 ராஜேஷ் குமார், த/பெ முத்துகிருஷ்ணன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கொடுமுடியாறு அணையில் இருந்து தனிக்கால்வாய் வழியாக வள்ளியூர் பெரியகுளத்திற்க தண்ணீர் வருகிறது என்றால் சரிதான். அந்த பெரிய குளம் நிரம்பிய பிறகு அதன் மதகு வழியாகதான் அடுத்த குளத்திற்கு தண்ணீர் செல்கிறது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மதகு வழியாக வரும் தண்ணீர் தேவர்குளத்திற்கு செல்கிறது என்று சொன்னால் சரிதான். தேவர்குளம் நிரம்பிய பிறகு அதன் மதகுவழியாகதான் காஞ்சாரம் கொன்றான்குளத்திற்கு தண்ணீர் செல்கிறது என்று சொன்னால் சரியல்ல குமாரபுதுக்குளத்திற்கு செல்கிறது. குமாரபுதுக்குளத்திற்கு தண்ணீர் சென்று நிரம்பிய பிறகு எங்கு செல்கிறது என்றால், அது எனக்கு தெரியவில்லை. கொடுமுடியாறு அணையில் இருந்து வரும் தண்ணீர் ஆனது ஒவ்வொரு குளமும் நிரம்பிய பிறகு காஞ்சாரம் கொன்றான்குளத்திற்கு தண்ணீர் வருகிறது என்று சொன்னால் சரிதான். காஞ்சாரம்கொன்றான்குளம் நிரம்பிய பிறகு அதன் மதகு வழியாக தண்ணீர் எங்கு செல்கிறது என்றால், தம்பிகுளத்திற்கு செல்கிறது. தம்பிகுளம் காஞ்சாரம்கொன்றான்குளத்திற்கு எந்த பக்கம் இருக்கிறத என்றால், தென்பக்கம் கீழ்புறமாக இருக்கிறது. தம்பிகுளத்திற்கு எந்த பக்கம் நல்லபெத்தான்குளம் இருக்கிறது என்று சொன்னால் நல்லபெத்தான்குளத்திற்கு தெற்குதள்ளிதான் தம்பிகுளம் இருக்கிறது. அரசு ஆவணம் படி காஞ்சாரம்கொன்றான்குளம் நிரம்பியபிறகு சர்வே எண் 112 வழியாக

நல்லபெத்தான்குளத்திற்கு தண்ணீர் வருவதாகதான் உள்ளது என்று சொன்னால் அது தவறு அரசு ஆவணத்தின்படி தம்பிகுளத்திற்குதான் செல்கிறது. அரசு ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால், பார்த்திருக்கிறேன். அரசு ஆவணத்தை பெற்று தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், தயாராக உள்ளேன். அரசு காஞ்சாரம்கொன்றான்குளம் நிரம்பிய பிறகு நல்லபெத்தான்குளத்திற்கு தண்ணீர் செல்வதாக சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு. நல்லபெத்தான்குளத்திற்கு மானாவாரி கால் சர்வே எண் 109 வழியாகவும் வருகிறது என்று சொன்னால், அது சரியாக தெரியவில்லை. ஆனால் நிறைய சின்ன சின்ன கால்கள் இருக்கிறது. அந்த கால்கள் வழியாகவும் குளத்திற்கு தண்ணீர் வருகிறது. நல்லபெத்தான்குளத்திற்கு சற்று வடக்கும் கிழக்கும் கால் வருகிறது என்று சொன்னால், வடக்கும் கிழக்கும்தான் கால் வருகிறது ஆனால் குளத்தின் சர்வே எண்ணுக்குள்தான் கால் செல்கிறது. வடமலையான் தென்கால் அமைந்துள்ளபகுதி தனி சர்வே எண் உள்ள பகுதி என்று சொன்னாலும் சரியல்ல. எங்கள் குளத்தின் கரையானது கிழக்கு பக்கமும் மேற்கு பக்கமும் மேடாக கரை அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். கிழக்கும் வடக்கும் உள்ள கரையில் வடமலையான் தென்காலில் இருந்து தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக அரசால் ஷட்டர் எதுவும் அமைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கால் இருக்கிறது. ஷட்டர் போடுவதற்கு எம் எல் ஏ நிதியில் இருந்து ஏற்பாடு பண்ணினோம் அதற்குள் வழக்கு போட்டுவிட்டார்கள். வடமைலையான்தென்கால்வாய்க்கு குறுக்கே மணல் மூட்டைகளை வைத்து

நாங்கள் தண்ணீர் தேக்கி அரசியல்வாதிகளின் துணையுடன் குளத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்ததால்தான் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்என்றால் அது தவறு எங்களுக்கு ஏற்கனவே கால் இருக்கிறது. நான் சொல்வதை போன்று அவ்வாறு எந்த காலும் இல்லை என்றும் அரசு ஆவணங்களிலும் கால் எதுவும் இருப்பதாக இல்லை என்று சொன்னால் அது தவறு அரசு ஆவணத்தில் உள்ளது. அரசியல் வாதிகள் துணை இருந்தாலும் அரசு ஆவணத்திற்கு எதிராக ஷட்டர் அமைக்க முடியாதால்தான் ஷட்டர் அமைக்க வில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அரசு நீர் ஒழுங்குபாடு முறைப்படி ஒரு குளத்திற்கு இரண்டு அணையில் இருந்து தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வடமலையான்கால் வழியாகதான் தண்ணீர் வருகிறது. எங்கள் விவசாயிகளுக்கு வடமலையான் தென்கால்வாயில் செல்லும் தன் கால் வழியாக செல்லும் நீர் மட்டுமே உரிமை உண்டு , அதனை குளத்திற்கு என்று உரிமை கோர முடியாது என்று சொன்னால் அது தவறு. குளத்திற்குதான் கொடுத்திருக்கிறார்கள். நல்லபெத்தான்குளத்தில் வடமலையான்கால்வாய்ில் இருந்து 2 , 3 பிரதிவாதிகளிடம் இருந்து உத்தரவு வாங்கியுள்ளோமா என்றால், முன்பு வாங்கியுள்ளோம். ஆனால் ஆவணம் எங்களிடம் இல்லை. முன்பு எப்போது வாங்கினோம் என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியவில்லை. பழைய ஆட்கள் 10 வருடத்திற்கு முன்பு வாங்கினார்கள். நாங்களே உபரிநீரை கண்டிகைபேரி குளத்திற்கு கொடுத்திருக்கிறோம். அவ்வாறு எந்த உத்தரவும்

இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நல்லபெத்தான்குளம் நிரம்பிய உடன் அந்த மதகு வழியாக வெளியே வரும் தண்ணீர் ஆனது வடமலையான் தென்காலில் விழுவது போன்று அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால சுற்றி கால்தான் இருக்கிறது. ஒரு காலில் வரும் தண்ணீரை அதே கால் வழியாக வெளியேற்றுவது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. மறுகாலை திரட்டில் வைத்திருக்கிறார்கள் அதற்கு மேற்கு பக்கம் வழியாக கால் இருக்கிறது. அதற்கு மேற்கே என்றால் எத்தனை அடியில் கால் இருப்பதாக நான் சொல்லுகிறேன் என்றால் 10 அடிக்குள் கால் இருப்பதாக சொல்லுகிறேன். அவ்வாறு ஒரு கால் அமையவில்லை என்று சொன்னாலும் நான் பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. 3ம் தபசில் நல்லபெத்தான்குளமானது பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதே போன்று ஒவ்வொரு கால்வாயின் பராமரிப்பும், கட்டுப்பாடும் பொதுப்பணித்துறையில் தான் இருக்கிறது என்றால் சரிதான். நான் சொல்வது போன்று ஒரு கால்வாய் இல்லை என்றும், அரசு ஆவணத்திலோ பூமியிலோ இல்லை என்று சொன்னால் அது தவறு. இருக்கிறது. கண்டிகைப்பேரி குளம் வடமலையானகுளத்தை தாண்டி தென்புறம் கிழக்கே உள்ளது என்றால், இல்லை. எங்கள் ஊர் குளத்திற்கு நேர் கிழக்கே இருக்கிறது. ஆனால் நல்லபெத்தான்குளத்திற்கு கிழக்கு பக்கம் செல்லும் வடமலையான் தென் கால் ஆனது சற்று தெற்கே சென்று கண்டிகைப்பேரி

குளத்திற்கு செல்வதற்கு ஏதுவாகதான் ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது என்றால் ஷட்டர் உள்ளது. ஆனால் கிழக்கே செல்வதற்கும் கால் இருக்கிறது. வடமலையான்தென்கால்வாயில் ஒவ்வொரு குளத்திற்கும் தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக அரசால் அமைக்கப்பட்ட ஷட்டரானது கிழக்கு கரையில் தான் இருக்கிறது என்று சொன்னால் இல்லை. பண்டாரகுளத்திற்கு குறுக்கே ஷட்டர் போட்டுமேற்கு நோக்கி செல்கிறது. பண்டாரகுளம் வடமலையான் காலுக்கு கிழக்கு பக்கம்தான் இருக்கிறது என்று சொன்னால் இல்லை. வடமலையான் காலில் இருந்து மேற்கு பக்கம் பண்டாரகுளம் இருக்கிறது. வடமலையான் வடகால் தென்கால் என பிரிவும் பகுதியில் இருந்து வடமலையான் தென்காலுக்கு குறுக்கே பண்டாரகுளத்தில் போட்டுள்ள ஷட்டர் வரையில் உள்ள வடமலையான் தென்காலில் கிழக்கு பக்கம்தான் அரசால் ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை சி ல ஷட்டர் வடக்கு பார்த்து இருக்கிறது. எங்களுக்கு தெற்கே பார்த்து போவதற்கு ஷட்டர் கேட்டு இருந்தோம் வழக்குபோட்டுவிட்டார்கள். பெருமளஞ்சி குளத்திற்கு செல்லும் தண்ணீர் கால் வடமலையான் தென்கால்வாயில் ஏர்வாடியில் இருந்து பண்டாரகுளம் செல்லும் பகுதியில் ஷட்டர் இடதுபுறம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் குளத்திற்கும் பண்டாரகுளத்திற்கும் வலதுபுறம் கால் உள்ளது. சூச்சகுளத்திற்கு செல்லும் காலின் ஷட்டரும் இடதுபுறம்தான் உள்ளது என்றால் சரிதான். கோவைநேரிகுளத்திற்கு செல்லும் காலும் இடதுபுறம்தான் உள்ளது என்றால் சரிதான். கரந்தானேரிகுளத்திற்கு செல்லும் காலில் உள்ள ஷட்டரும் இடதுபுறம்தான் உள்ளது என்றால் சரிதான். அதே போன்று 1ம் தபசில்

கண்டிகைபேரிகுளத்திற்கு செல்லும் காலில் உள்ள ஷட்டரும் இடதுபுறம்தான் உள்ளது என்றால் சரிதான். எல்லா ஷட்டரும் அரசால் இடதுபுறம்தான் அமைக்கப்பட்டுள்ளது பூகோள அமைப்பின்படி மேற்கு பக்கம் மேடு என்பதால் மேற்கு பக்கம் உள்ள குளங்களுக்கு தண்ணீர் செல்லுவதற்கு ஏதுவாக மேற்கு பக்கம் காலில் ஷட்டர் எதுவும் அமைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் குளம் காலுக்கு தெற்கு கிழக்காக இருக்கிறது. எங்கள் குளம் காலுக்கு தெற்கு மேற்காகதான் உள்ளது காலுக்கு கிழக்கே இல்லை என்று சொன்னால் அது தவறு. கால் நேரே வடக்கில் இருந்து எங்கள் குளத்திற்குதான் வரும். ஏற்கனவே சூட்டுப்பொத்தை பகுதியில் எங்களுக்கு வேறு இடங்கள் உள்ளது என்றும், அந்த இடங்களில் மானாவாரி காலை மறைத்து எங்கள் குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு ஏதுவாக அமைக்காமல் தண்ணீரை திருப்பிவிட்டு வடமலையான் தென்காலில் தண்ணீர் இருப்பதை போன்று சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் பெறுவதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொன்னால் இல்லை. அவர்கள்தான் கெய்ன்ஸ் பள்ளிக்கு சாதகமாக தண்ணீர் வருவதை அடைத்து வைத்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றம் மூலமாக நாங்கள் ஒருமுறை உடைத்து தண்ணீர் எடுத்தோம். அவ்வாறு கெய்ன்ஸ் பள்ளியில் எந்த பகுதியில் அடைத்தார்கள் என்று சொன்னால், காலையே அடைத்துவிட்டார்கள். ஊஸ்தியில் தண்ணீர் கால் உள்ளது என்றும் அந்த கால் வழியாக தண்ணீர் செல்கிறது என்று சொன்னால் அது தவறு அவர்களாக கால் அடைத்துவிட்டு வேறு கால் அமைத்துள்ளார்கள். கண்டிகை பேரி குளத்தில் உள்ள விவசாயிகளுக்கும் கெய்ன்ஸ் பள்ளிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று

சொன்னால் சரியல்லஇருக்கிறது. ஜெயராஜிக்கு அவர்கள் உறவினர்கள். வடலையான் காலுக்கும் கெய்ன்ஸ் பள்ளிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றுசொன்னால், சரியல்ல. குளம் பெருகிவிட்டால் அவர்கள் இடத்திற்கு தண்ணீர் சென்றுவிடும் என்பதால் குளத்தை பெருகவிடாமல் தடுக்கிறார்கள். மேலே உள்ள அவர்கள் என்று குறிப்பிடும் கெய்ன்ஸ் பள்ளி உள்ள இடம் அவர்களது பட்டா இடம் என்றால் சரிதான். கெய்ன்ஸ் பள்ளி குளத்தில் இருந்து 9 அடி மேட்டில்தான் உள்ளது என்றால் இல்லை சமமாகதான் உள்ளது. எங்களுடைய குளத்திற்கு எவ்வளவு பள்ளம் இருக்கிறதோ அதே பள்ளம்தான் கெய்ன்ஸ் பள்ளி இடத்திலும் உள்ளது என்றுசொன்னால் கெய்ன்ஸ் பள்ளியை ஒட்டி குளம் இருக்கிறது சரிதான். குளத்தின் மேற்கு கரை நடுப்பகுதியில் இருந்து 8 அடி உயரத்தில் உள்ளது என்றால் அது தவறு மேற்கு பக்கம் கரை கிடையாது. மேற்கு பக்கம் கரை இல்லை என்றால் குளம் கடல்வரை உள்ளதா என்றால், குளத்திற்கு அடுத்து உள்ள பட்டா நிலமும் குளமும் ஒரே சமமாகதான் இருக்கும். குளத்தின் நடுபகுதி பள்ளத்தில் இருந்து நான் சொல்லும் பட்டா இடமும் கரையும் ஒரே சமமாக உள்ளதாக சொல்லும் இடம் எவ்வளவு இடம் உயரத்தில் இருக்கும் என்றால் மத்தியில் இருந்து 5 அடி உயரததில் இருக்கும். அந்த பட்டா இடம் என்று நான் சொல்லும் இடம்தான் கெய்ன்ஸ் பள்ளி இடம் என்று சொன்னால், கெய்ன்ஸ் பள்ளிக்கும் இருக்கிறது வேறு ஆளுக்கும் இடம் இருக்கிறது. வேறு ஆள் என்று சொல்லும் இடத்தில் விவசாயம் நடக்கிறதா என்றால், நடக்கிறது. கெய்ன்ஸ் பள்ளியை சுற்றி ஏற்கனவே 12 அடி உயரத்தில் காம்பவுண்ட் சுவர்

அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கு பக்கம் உள்ள குளத்தில் உள்ள தண்ணீர் பள்ளிக்குள் வந்துவிடும் என்ற காரணத்தினால் காலை தடுத்துள்ளார்கள் என்று நான் சொல்லும் விவரம் பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குளம் இன்றையதேதியில் முழுவதும் பெருகவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போன்று கண்டிகை பேரிகுளமும் முழுதும் நிரப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. பெருகியுள்ளது. கண்டிகைபேரி குளத்திற்கு வடமைலையான்தென்காலில் இருந்து மூன்று நாட்களுக்கு தண்ணீர் உத்தரவு பெற்றால் மட்டுமே தண்ணீர் நிரம்பும் என்றுசொன்னால் சரியல்ல. ஏற்கனவே அவர்கள் 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்து மூன்று நாட்களுக்கு உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நல்லபெத்தான்குளத்தில் ஏற்கனவே கொடுமுடியாறு அணையில் இருந்து வரும் தண்ணீரைதான் நாங்கள் எங்கள் குளத்திற்கு பெறமுடியுமே தவிர வடமலையான் தென்காலி' ல இருந்து தண்ணீர் பெறமுடியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 18.1.2021 ல் எங்கள் குளத்திற்கு வடபக்கம் உள்ள கரையை உடைத்து அதன் மூலமாக வடமலையான் தென்காலில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தோம் என்றும் அதனை வாதிகள் தடுத்தார்கள் என்றுசொன்னால் சரியல்ல. ஏற்கனவே கால் இருக்கிறது. நான் சொல்லுவது தவறு என்றும், தனி நபருக்கு சொந்தமான சர்வே எண் 108 வழியாக கால் அமைப்பதற்கு நான் முயற்சி செய்தோம் என்றாலும அதனை வாதிகள் தடுத்தார்கள் என்று சொன்னாலும் சரியல்ல. அரசு தண்ணீர் ஒழுங்குமுறைப்படி

நல்லபெத்தான்குளத்திற்கு வடமலையான் தென்காலி் ல இருந்து தண்ணீர் பெற எவ்வித உரிமையும் இல்லை என்றுசொன்னால்சரியல்ல. எங்கள் செயலால் வாதிகளுக்கு தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக இல்லை என்றும்,சரியல்ல. வடமலையான் தென்காலுக்கு குறுக்கே மணல் மூடை வைத்து தண்ணீர் வருவதை தடுக்கும்பட்சத்தில் வாதிகளுக்க தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக அமையாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றுசொன்னால் சரியல்ல.